**செய்தி வெளியீடு எண்: 951** **நாள்: 11.07.2024**

# செய்தி வெளியீடு

## இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகம்,
## அரும்பாக்கம், சென்னை – 600 106.
## 2024–2025–ம் கல்வியாண்டிற்கான
## பி.என்.ஒய்.எஸ். (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டப் படிப்பு
## சேர்க்கைக்கான கால அவகாசம் நீட்டிப்பு குறித்த
## அறிவிக்கை

2024–2025–ம் கல்வியாண்டில் தமிழ்நாட்டிலுள்ள அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு மற்றும் சுயநிதி மருத்துவக் கல்லூரிகளிலுள்ள அரசு மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான பி.என்.ஒய்.எஸ். (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டப் படிப்பு சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் தனித்தனியாக தகுதியுள்ளவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பட்டபடிப்புக்கான (விண்ணப்பப் படிவம், தகவல் தொகுப்பேட்டினை, www.tnhealth.tn.gov.in என்ற வலைதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். (விண்ணப்பப்படிவங்கள் இயக்குநரக அலுவலகத்திலோ அல்லது தேர்வுக்குழு அலுவலகத்திலோ அல்லது வேறு எந்த ஆயுஷ்முறை மருத்துவக் கல்லூரிகளிலோ வழங்கப்படமாட்டாது.) மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள், கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களினை www.tnhealth.tn.gov.in என்ற இணையதளத்தில் உள்ள உரிய தகவல் தொகுப்பேட்டில் அறியலாம்.

**பி.என்.ஒய்.எஸ். பட்டப்படிப்பு குறித்த விவரங்கள்:**

| படிப்புப் பிரிவு | | படிப்பிற்கான காலம் | கல்வித்தகுதி ** | ஒதுக்கீட்டு விவரங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | | | அரசு ஒதுக்கீடு | நிர்வாக ஒதுக்கீடு |
| மருத்துவப் பட்டப்படிப்பு பி.என்.ஒய்.எஸ். (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) | அரசு மருத்துவக் கல்லூரி | 5 ½ ஆண்டுகள் | 10+2; | ஆம் | இல்லை |
| | சுயநிதி மருத்துவக் கல்லூரி | | | ஆம் | ஆம் |

**விரிவான விவரங்களுக்கு உரிய தகவல் தொகுப்பேட்டினைப் பார்க்கவும்.**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கோரப்பட்டுள்ள அனைத்துச் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களையும் இணைத்து **செயலாளர்,** தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை இயக்குநர் அலுவலகம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை–600 106 என்ற முகவரிக்கு 22.07.2024 மாலை 5.30 மணிக்குள் சமர்ப்பித்தல் / வந்து சேர வேண்டும்.

| | |
|---|---|
| விண்ணப்பப் படிவம் மற்றும் தகவல் தொகுப்பேட்டினைப் பதிவிறக்கம் செய்ய நீட்டிக்கப்பட்ட கடைசி நாள் | 22.07.2024 மாலை 5.00 மணி வரை |
| பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் தபால் / கூரியர் சேவை வாயிலாக சமர்ப்பிக்கவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ நீட்டிக்கப்பட்ட கடைசி நாள் | 22.07.2024 மாலை 5.30 மணி வரை |

இயக்குநர்,
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோதித் துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu